
தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 232 | 4 Pages | 20.3.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 232 | 4 பக்கங்கள் | 20.3.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் அலன்**

**விளக்கம்:**
**ஒருவன் எந்தப் பொருளிலிருந்து, எந்தப் பொருளிலிருந்து பற்று நீங்கியவனாக இருக்கின்றானோ, அந்தந்தப் பொருளால் அவன் துன்பம் அடைவதில்லை.**

# நெல்லை கொலை சம்பவம்: சட்டத்தின் பிடியில் இருந்து யாரும் தப்ப முடியாது... முதல்வர் ஸ்டாலின் உறுதி

சென்னை, மார்ச்.20

தமிழ்நாடு சட்டசபையில் பட்ஜெட் மீதான 3வது நாள் விவாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர்.

இந்த சூழலில் ஓய்வு பெற்ற சப் இன்ஸ்பெக்டர் நெல்லையில் கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து தமிழக சட்டப்பேரவையில் எதிர்கட்சி சார்பில் கொண்டு வரப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது.

அப்போது பேசிய எதிர்கட்சி தலைவர், "நெல்லை மசூதியில் ரமலான் தொழுகை முடித்து வீடு திரும்பிய ஜாஹிர் உசேன் மர்ம நபர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். தனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என மூன்று மாதங்களுக்கு முன்பே நெல்லை காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். ஆனால் அந்த புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. யார் மீது புகார் அளிக்கப்பட்டதோ அவரை அழைத்து கட்டப்பஞ்சாயத்து செய்ததாகவும் கூறப்படுகிறது.

காவல்துறை அலட்சியத்தால் குற்றவாளிகள் தனக்கு சாதகமாக பயன்படுத்தி இந்த செயலை செய்துள்ளனர். இது குறித்து காவல்துறையிடம் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எப்படியும் என்னை கொன்று விடுவார்கள் என அவர் பேசிய வீடியோ காட்சிகள் வெளிவந்துள்ளன. புகாரை உரிய முறையில் விசாரிக்காத காரணத்தினாலே இந்த படுகொலை நடைபெற்றுள்ளது. புகார் மீது உரிய நடவடிக்கை எடுக்காத காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்து பேசிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "இந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பிரச்னையில் நடவடிக்கை கடுமையாக இருக்கும். ஜாஹீர் உசேன் நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத நபர்களால் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மனைவி அளித்த புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். வழக்கு தொடர்பாக இருவர்கோர்ட்டில்சரணடைந்துள்ளனர். மற்றவர்களை காவல்துறையினர் தேடி வருகின்றனர்.





முகநூல் பக்கத்தில் ஜாஹிர் உசேன் கூறிய குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. முதற்கட்ட பிரச்னையில் கிருஷ்ணமூர்த்தி என்கிற தவுபிக் என்பவரோடு நிலப்பிரச்சனை இருப்பது தெரியவந்துள்ளது. மாறி மாறி காவல்துறையில் புகாரும் அளித்துள்ளனர். தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறி பதிவிட்ட வீடியோவை தொடர்ந்து எதிரிகளை காவல்துறையினர் விசாரித்துள்ளனர். இருப்பினும் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது. குற்றவாளிகள், பின்னணியில் இருந்தவர்கள் அனைவரும் பாரபட்சமின்றி நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்

சட்டத்தை யாரும் கையில் எடுக்க அரசு அனுமதிக்காது. சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் தப்ப முடியாது" என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதில் அளித்தார்.

இதனிடையே இந்த சம்பவம் தொடர்பாக ஜவாஹிருல்லா, த.வா.க. வேல்முருகன், கொங்கு ஈஸ்வரன், பாமக ஜி.கே.மணி, நாகை மாலி, ஷாநவாஸ், நயினார் நாகேந்திரன், தளி ராமசந்திரன், சதன் திருமலைக்குமார் எம்.எல்.ஏ., ஆகியோர் நெல்லை கொலை விவகாரத்தில் அதிகாரிகள்மீதுநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும், முக்கிய குற்றவாளியை கைது செய்ய வேண்டும் என்றும், அவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

## சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் 22ந்தேதி மணிப்பூர் பயணம்

புதுடெல்லி, மார்ச்.20

வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் கிட்டதட்ட 2 ஆண்டுகளாக கலவரத்தின் பிடியில் சிக்கியுள்ளது. மெய்தி மற்றும் குகி இன மக்களுக்கு இடையேயான இந்த கலவரத்தில் இதுவரை 250க்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர்.

மேலும் வன்முறை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகள், உடைமைகளை விட்டுவிட்டு பல மாதங்களாக நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். இதனிடையே மணிப்பூர் முதல்மந்திரியாக இருந்து வந்த பைரேன் சிங் கடந்த மாதம் தனது பதவியை ராஜினாமா செய்ததை தொடர்ந்து, அங்கு ஜனாதிபதி ஆட்சி அமல்படுத்தப்பட்டது.

இந்த நிலையில் பி.ஆர்.கவாய் உள்பட சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் 6 பேர் வருகிற 22ந்தேதி மணிப்பூர் செல்ல இருப்பதாக தேசிய சட்ட சேவைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"மணிப்பூர் ஐகோர்ட்டின் 20ம் ஆண்டு விழாவையொட்டி சுப்ரீம் கோர்ட்டு நீதிபதியும், தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் செயல் தலைவருமான பி.ஆர்.கவாய், சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் சூர்ய காந்த், விக்ரம் நாத், எம்.எம்.சுந்தரேஷ், கே.வி.விஸ்வநாதன் மற்றும் என்.கோடீஸ்வர் சிங் ஆகியோருடன் வருகிற 22ந்தேதி மணிப்பூருக்கு செல்கிறார். இந்தபயணத்தின்போதுநீதிபதிகள்6பேரும்வன்முறையால் பாதிக்கப்பட்ட மக்கள் தஞ்சமடைந்துள்ள நிவாரண முகாம்களுக்கு செல்வார்கள்.

நீதிபதிகளின் இந்த வருகை பாதிக்கப்பட்ட மக்களுக்கான சட்ட மற்றும் மனிதாபிமான உதவியின் தற்போதைய தேவையை வலியுறுத்தும். இந்த பயணத்தின்போது இம்பால் கிழக்கு, இம்பால் மேற்கு மற்றும் உக்ருல் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள புதிய சட்ட உதவி மையங்களையும், மாநிலம் முழுவதும் உள்ள சட்ட சேவை முகாம்கள் மற்றும் மருத்துவ முகாம்களையும் நீதிபதி கவாய் தொடங்கி வைப்பார்.

தொடரும் வன்முறைகளுக்கு மத்தியில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்ட உதவி மற்றும் ஆதரவை வழங்குவதில் மணிப்பூர் மாநில சட்ட சேவைகள் ஆணையத்துடன் தேசிய சட்ட சேவைகள் ஆணையம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது."

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இமாசல பிரதேசத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு பனிச்சரிவு எச்சரிக்கை

சிம்லா, மார்ச்.20

இமாசல பிரதேச மாநிலத்தில் கடந்த 1ந்தேதி முதல் 18ந்தேதி வரை 75.3 மி.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. இந்த காலகட்டத்தில் வழக்கமாக 67.7 மி.மீ. மழைப்பொழிவு பதிவாகக்கூடிய சூழலில், தற்போது 11 சதவீதம் அதிக மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

இந்தநிலையில், இமாசலபிரதேசத்தில்உள்ளஉயரமானபகுதிகளுக்கு அடுத்த24மணிநேரத்திற்குபனிச்சரிவுஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்துசண்டிகரில்உள்ளபுவியியல்ஆய்வுமையம்வெளியிட்டுள்ள அறிக்கையில், இமாசல பிரதேசத்தின் சம்பா பகுதி (2,850 மீட்டர் உயரத்திற்கு மேல்) மற்றும் லாஹவுல் மற்றும் ஸ்பிட்டி பகுதிகளில் (2,900 மீட்டர் உயரத்திற்கு மேல்) பனிச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக ஆரஞ்சு எச்சரிக்கை (பாதுகாப்பற்ற நிலை) விடுக்கப்பட்டுள்ளது.

அதே போல், குல்லு மற்றும் கின்னோர் பகுதிகளுக்கு (2,900 மீட்டர் உயரத்திற்கு மேல்) மஞ்சள் எச்சரிக்கை (ஓரளவு பாதுகாப்பற்ற நிலை) மற்றும்சிம்லாமாவட்டத்திற்குபச்சைஎச்சரிக்கை(உறுதியற்றதன்மை) விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பட்டியலின மக்கள் சுட்டுக்கொலை: 44 ஆண்டுகளுக்குப் பின் 3 பேருக்கு தூக்குத் தண்டனை விதிப்ப

லக்னோ, மார்ச்.20

உத்தரப் பிரதேசத்தின் தெஹுலி கிராமத்தில் 1981ம் ஆண்டு நவம்பர் 18ம் தேதி அன்று, மாலை 4.30 மணியளவில் காக்கி உடையணிந்த 17 பேர் கொண்ட கொள்ளைக் கும்பல் ஊருக்குள் புகுந்தனர். இவர்கள் அங்கிருந்த பட்டியலின மக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இதில், 6 மாத குழந்தை மற்றும் 2 வயதுடைய இரு குழந்தைகள் உள்பட 24 பட்டியலின சமூகத்தினர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நவம்பர் 19ம் தேதி, 1981ல் உள்ளூரைச் சேர்ந்த லயிக் சிங் என்பவரால் முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்) தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக கொலை, கொள்ளை போன்ற வழக்குகளின் கீழ் குற்றவாளிகள் 17 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதில் 14 பேர் வழக்கு விசாரணை நடைபெற்ற காலத்திலேயே உயிரிழந்தனர். அப்போதே ஒருவர் தலைமறைவானதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் விரிவான விசாரணையைத் தொடர்ந்து, கொள்ளைக் கும்பலின் தலைவர்கள் சந்தோஷ் மற்றும் ராதே உள்ளிட்ட கொள்ளையர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான வழக்கு மெயின்பூர் மாவட்ட கோர்ட்டில் கடந்த 44 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது.

வழக்கின்வாதங்கள்அனைத்தும்முடிந்தநிலையில்கடந்த12ந்தேதியன்று, குற்றம் சாட்டப்பட்டு இருந்த கப்டன் சிங் (வயது 60), ராம்பால் (60), ராம் சேவக் (70) ஆகிய 3 பேரையும் குற்றவாளிகள் என்று நீதிபதி இந்திரா சிங் தீர்ப்பளித்தார். தண்டனை விவரம் பின்னர் அறிவிப்பதாக தெரிவித்தார்.

இந்தநிலையில் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்ட, கப்டன் சிங், ராம்பால், ராம் சேவக் ஆகிய 3 பேருக்கும் நீதிபதி தூக்குத்தண்டனை மற்றும் தலா ரூ.50 ஆயிரம் விதித்தார் என்று அரசு வக்கீல் ரோஹித் சுக்லா தெரிவித்தார்.

இந்த படுகொலை சம்பவம் அப்போது உத்தரபிரதேச அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது. அன்றைய பிரதமராக இருந்த இந்திரா காந்தி, உடனடியாக அந்த கிராமத்துக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார். அப்போது நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் பிரதமர் வாஜ்பாய், இந்த படுகொலை சம்பவத்தை கண்டித்து திஹுலியில் இருந்து பிரோசாபாத்தில் உள்ள சதுபூர் வரை பாதயாத்திரையாக சென்றார்.

## ஈரோடு மாவட்டம்:சேலம் ரவுடி வெட்டி கொலை.. சுதாரித்த போலீஸ்: ஹைவேயில் 3 பேர் கைது





சேலம், மார்ச்.20

இதுவரை 4 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் 4 பேரை போலீசார் தேடி வருகின்றனர். இந்த சுப்பாக்கிச்சூடு சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் கிச்சிப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் ஜான். இவர் சாணக்யா என்றும் அழைக்கப்படுவார். ஜான் (எ) சாணக்கியன் மீது சேலம் மாவட்டத்தில் பல்வேறு கொலை முயற்சி வழக்குகள் நிலுவையில் உள்ளது. தற்போது இவர் குடும்பத்தினருடன் சேலம் மாவட்டத்தில் இருந்து திருப்பூருக்கு குடிபெயர்ந்துள்ளார்.

நிலுவையில் இருந்த வழக்கு தொடர்பாக சேலம் மாவட்டம் அன்னதானப்பட்டிக்கு தன் மனைவியுடன் சேலம் சென்று விட்டு திருப்பூர் நோக்கி தனக்கு சொந்தமான காரில் பயணித்துள்ளார். அப்போது கார் சித்தோடு அருகே வந்தபோது, சுற்றி வளைத்த மர்மகும்பல் காரில் பயணித்த ஜானை சரமாரியாக வெட்டியுள்ளது.

இதை தடுக்கச் சென்ற மனைவி ஆதிரா என்பவருக்கும் கை கால்களில் வெட்டு விழுந்துள்ளது. இந்த தகவலறிந்து சித்தோடு போலீசார் அருகாமையில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு இருவரையும் அழைத்துச் சென்றனர். இதில் பலத்த வெட்டுக் காயமடைந்த ஜான் பரிதாபமாக உயிரிழந்த நிலையில், பெருந்துறை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நடைபெற்று வருகிறது.

அவரது மனைவி ஆதிராவுக்கு தொடர்ந்து நசியனூர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பிரபல ரவுடி சித்தோடு தேசிய நெடுஞ்சாலையில் காரில் பயணித்த போது வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த சம்பவத்தில் ஈடுபட்ட மர்மக் கும்பல் குறித்து சித்தோடு போலீசார் விசாரித்துள்ளனர்.

அப்போது பவானி அருகே மர்மக் கும்பல் தப்பி சென்றதாகவும் அங்கு டிஎஸ்பி ரத்தினகுமார் தலைமையிலான போலீசார்மர்மக்கும்பலைகால்களில் சுட்டு பிடித்துள்ளனர். சம்பவத்தில் ஈடுபட்ட சதீஷ், சரவணன் மற்றும் பூபாலன் ஆகிய மூவரையும் போலீசார் சுட்டுப் பிடித்துள்ளனர். இவர்கள் உட்பட மொத்தமாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 4 பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

## நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் 13வது ஆண்டு பட்டமளிப்பு விழா




சென்னை, தாம்பரத்தை அடுத்த கௌரிவாக்கம், சந்தோஷ் நகரில் உள்ள நியூ பிரின்ஸ் ஸ்ரீ பவானி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் 13வது ஆண்டு பட்டமளிப்பு விழா, அதன் தலைவர் கே.லோகநாதன் தலைமையில், கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

பட்டமளிப்பு விழாவில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மயில்சாமி அண்ணாதுரை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தி, பல்கலைக்கழக தரவரிசையில் சிறப்பிடம் பிடித்த மாணவ மாணவியருக்கு பட்டங்கள், பதக்கங்கள் மற்றும் ரொக்க பரிசினையும்ஏனையமாணவ மாணவியருக்கு பட்டங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

முன்னதாக, நியூபிரின்ஸ் கல்வி குழுமங்களின் துணைத்தலைவர் எல்.நவீன் பிரசாத் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் டாக்டர் டி.சரவணன்கல்லூரியின்வளர்ச்சி மற்றும் மாணவர்கள் பெற்ற வெற்றிகள் குறித்த ஆண்டறிக்கையை வாசித்தார்.

நியூ பிரின்ஸ் கல்வி குழுமங்களின்செயலர்வி.எஸ். மகாலட்சுமி, இயக்குனர் ஏ.சுவாமிநாதன் ஆகியோர் பட்டமளிப்பு விழாவிற்கு முன்னிலை வகித்தனர்.

பட்டம் பெற்ற மாணவர்கள் கல்லூரியின் செயலர் வி.எஸ்.மகாலட்சுமி முன்னிலையில், பட்டம் பெற்றதற்கான உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக, கல்லூரியின் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறையின் தலைவர் ஜி.துர்கா தேவி நன்றி உரையாற்றினார்.



சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் 26 பொதுமக்களின் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## அடுத்த கோடைகாலம் வரை சென்னைக்கு தடை இல்லாமல் தண்ணீர் விநியோகம்: அமைச்சர் கே.என்.நேரு தகவல்

சென்னை, மார்ச்.20

தமிழ்நாடு சட்டசபையில் பட்ஜெட் மீதான 3வது நாள் விவாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர்.

இந்நிலையில் கேள்வி நேரத்தில் போது, வளசரவாக்கம் தொகுதியில் கூடுதலாக மேல்நிலை நீர் தேக்க தொட்டி அமைக்கப்படுமா..? என்று சட்டமன்ற உறுப்பினர் காரபாக்கம் கணபதி கேள்வி எழுப்பினார்.



இதற்கு பதில் அளித்த அமைச்சர் கே.என்.நேரு, "சென்னையில் கடந்த ஆட்சி காலத்தில் 900 எம்.எல்.டி. தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. தற்போது 1,110 எம்.எல்.டி. தண்ணீர் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ள தண்ணீர் கோடை காலம் வரை போதுமானதாக இருக்கும். அடுத்த கோடை காலம் வரை தடை இல்லாமல் தண்ணீர் அளிக்கும் அளவுக்கு தண்ணீர் இருப்பு உள்ளது. இதற்கான திட்டத்திற்கு இந்தாண்டு ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

## சுனிதா வில்லியம்சின் சாதனை அனைவருக்கும் உத்வேகம் அளிக்கும்: செல்வப்பெருந்தகை



சென்னை: மார்ச்.20

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தனது எக்ஸ் தள பதிவில் கூறியிருப்பதாவது:

இந்திய வம்சாவளி அமெரிக்க விண்வெளி வீரர் சுனிதா வில்லியம்ஸ், தனது முதல் பயணத்தில் விண்கலத்தை இயக்கிய முதல் பெண் என்ற வரலாற்று சாதனை படைத்தவர். இன்று அவர் உள்ளிட்ட விண்வெளிவீரர்கள் பத்திரமாக பூமியில் கால் பதித்துள்ளார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். கடுமையான சோதனை நேரத்திலும் உறுதியாக இருந்து அவர் சாதனை படைத்துள்ளார். அவரது சாதனை அனைவருக்கும் உத்வேகம் அளிக்கும் விதமாக இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ரேசன் பொருட்கள்: வீடுகளுக்கே சென்று விநியோகிக்க நடவடிக்கை

சென்னை, மார்ச்.20

தமிழ்நாடு சட்டசபையில் பட்ஜெட் மீதான 3வது நாள் விவாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளித்து வருகின்றனர்.

சட்டசபையில் கேள்வி, பதில் நேரத்தில் பேசிய பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர்.காந்தி, ஏழை எளிய மக்கள் அதிகாலை பணிக்கு சென்று இரவு நேரத்தில் வீடு திரும்புவதால் நியாய விலைக்கடைகளில் பொருட்களை பெற முடியவில்லை என்பதால் நாகர்கோவில் தொகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடமாடும் நியாய விலைக்கடைகள் அமைக்க அரசு முன்வருமா.. ? என கேள்வி எழுப்பினார்.




அதற்கு பதிலளித்து பேசிய உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, "நாகர்கோயிலில் ஏற்கனவே 31 நியாய விலைக்கடைகளும், 10 பகுதிநேரக் கடைகளும் இயங்கி வருவதால் நடமாடும் நியாய விலைக்கடைகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை" என்று கூறினார்.

தொடர்ந்துபேசிய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், "கர்நாடக மாநிலத்தில் எப்போது வேண்டுமானாலும் ரேசன் பொருட்கள் பெறும் வகையில் திட்டம் இருக்கும் நிலையில், அதைப் போலவே தமிழகத்திலும் செயல்படுத்த அரசு முன்வருமா..?" என்று கேள்வி எழுப்பினார்.

செங்கோட்டையனுக்கு பதிலளித்து பேசிய அமைச்சர் சக்கரபாணி, "ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களில் வீடுகளுக்கு நேரடியாக ரேசன் பொருட்களை விநியோகிக்கும் திட்டம் குறித்து வரும் 20ம் தேதி உணவுத்துறை அதிகாரிகள் பார்வையிட இருப்பதாகவும்,

அவர்கள் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் முதல்அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று இத்திட்டத்தை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் கூறினார்.

## ஆவின் மூலம் கடந்த ஆட்சியை விட கூடுதலாக 11 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் : அமைச்சர் பேச்சு

சென்னை மார்ச்.20

தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது, அணைக்கட்டு தொகுதியில் பால் குளிரூட்டும் மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நந்தகுமார் எம்.எல்.ஏ. எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜகண்ணப்பன், "பால் விற்பனையில் 16 ரூபாய் குறைவாக வழங்கி வருகிறோம். தனியார் பால் 56 ரூபாய்க்கும், ஆவின் 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஆவின் நிறுவனத்தை நட்டம் இல்லாமல் நடத்த வேண்டும்.

கடந்த ஆட்சியில் இருப்பதை போன்று பால் தட்டுப்பாடு இருக்கவில்லை. பால் விற்பனை நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஆட்சியை விட தற்போது 11 லட்சம் லிட்டர் கூடுதலாக ஆவின் மூலம் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

## அதிர்ச்சி சம்பவம்: ஒன்றரை வயது குழந்தையை கடித்த வெறிநாய்

சென்னை, மார்ச்.20

ஆர்.கே.பேட்டை அருகே ஸ்ரீகிருஷ்ணாபுரம் என்கிற மூரகுப்பம் கிராமத்தைச் சேர்ந்தவர் காயத்ரி. இவரது ஒன்றரை வயது ஆண் குழந்தை வெற்றிவேல். காயத்ரி தனது குழந்தையை வீட்டின் முன்னால் விட்டுவிட்டு மாட்டை கட்டுவதற்காக சென்றார். அப்போது அங்கு வந்த ஒரு வெறிநாய் குழந்தை வெற்றிவேலின் மூக்கை கடித்து குதறியது. குழந்தையின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த காயத்ரி, கூச்சலிட்டு அக்கம்பக்கத்தினர் உதவியுடன் வெறிநாயை துரத்தினார். படுகாயம் அடைந்த குழந்தை சிகிச்சைக்காக சோளிங்கர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக ராணிப்பேட்டையில் உள்ள சி.எம்.சி. மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்து சென்றனர். அதே இரவில் மற்றொரு சம்பவத்தில் ஆர்.கே. பேட்டை பஜார் தெருவில் வசிக்கும் வெங்கடேசன் என்பவரின் மகன் சந்திரமவுலி (14) வீட்டின் முன்னால் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென வெறிநாய் ஒன்று சிறுவன் மீது பாய்ந்து கடித்தது. அக்கம்பக்கத்தினர் நாயை விரட்டி காயம் அடைந்த சிறுவனை சோளிங்கர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். ஒரே இரவில் 2 பேரை வெறிநாய்க்கடித்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

## நெல்லை: முன்னாள் எஸ்.ஐ. கொலை வழக்கு குற்றவாளிகளை பிடிக்க 3 தனிப்படைகள் அமைப்பு

திருநெல்வேலி மார்ச்.20

நெல்லை மாவட்டம் டவுன் பகுதியை சேர்ந்தவர் ஓய்வு பெற்ற முன்னாள் எஸ்.ஐ. ஜாகீர் உசைன். முன்னாள் முதல்மந்திரி கருணாநிதியின் தனிப்பிரிவு அதிகாரியாக பணியாற்றிய இவர், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் விருப்ப ஓய்வு பெற்று நெல்லையில் வசித்து வந்தார். இந்நிலையில், ரமலான் மாதத்தை முன்னிட்டு அதிகாலை தொழுகையை முடித்துவிட்டு தெற்கு மவுன்ட் சாலை வழியாக ஜாகீர் உசைன் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தார். அப்போது, இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் சிலர் ஜாகீர் உசைனை அரிவாளால் வெட்டி கொலை செய்துவிட்டு தப்பியோடினர். முன்னதாக ஜாகீர் உசைன் வக்பு வாரிய நிலங்களை ஆக்கிரமித்தவர்களை எதிர்த்துக்குரல் கொடுத்துவந்ததாககூறப்படுகிறது. இதனால் தனக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வருவதாக, சில நாட்களுக்கு முன்பு ஜாகீர் உசைன் பேசிய காணொளி வெளியாகியிருக்கிறது. இந்த கொலை வழக்கு தொடர்பாக கார்த்திக், அக்பர்ஷா ஆகியோர், திருநெல்வேலி 4வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இதனிடையே, இந்த வழக்கில் முக்கிய குற்றவாளிகளான கிருஷ்ணமூர்த்தி, அவரது மனைவி நூருண்ணிசா ஆகிய 2 பேரை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். இருவரும் வெளி மாவட்டத்திற்கு தப்பியோடி இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், குற்றவாளிகளை பிடிக்க 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

## அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டால் சம்பளம் கிடையாது தமிழக அரசு எச்சரிக்கை

சென்னை, மார்ச்.20

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்சங்கங்கள் இன்று ஒருநாள் வேலை நிறுத்த போராட்டம் அறிவித்துள்ள நிலையில், பணிக்கு வராமல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கிடையாது என தமிழக அரசு எச்சரித்துள்ளது.




மருத்துவ விடுப்பைத் தவிரசாதாரணவிடுப்போ, மற்ற விடுப்போ அரசு ஊழியர்கள் எடுக்கக் கூடாது என்றும், காலை 10.15 மணிக்குள் பணிக்கு வராத ஊழியர்களின் விவரங்களை சேகரிக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

## சிகிச்சைக்கு வந்த இளம்பெண்ணிடம் ஆபாச பேச்சு: கைது செய்யப்பட்ட டாக்டர்

திருநெல்வேலி மார்ச்.20

நெல்லை மாவட்டம் பணகுடியில் செயல்பட்டு வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், பணகுடி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து தினமும் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்று செல்கிறார்கள்.

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் வள்ளியூரை சேர்ந்த பாலச்சந்தர் (வயது 48) டாக்டராக பணியாற்றி வந்தார். நேற்று மதியம் சுமார் 24 வயதுடைய இளம்பெண் ஒருவர் சிகிச்சைக்காக வந்தார். அப்போது, டாக்டர் பாலச்சந்தர் அந்த பெண்ணிடம் ஆபாசமான வார்த்தைகளால் பேசியதாககூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த அந்த பெண் இதுகுறித்து போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார்.

அதன்பேரில் போலீசார், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். இதில் பாலச்சந்தர், இளம்பெண்ணிடம் ஆபாசமாக பேசியது தெரிய வந்தது. இதையடுத்து பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் போலீசார் வழக்குப்பதிந்து, டாக்டர் பாலச்சந்தரை கைது செய்தனர்.

## சென்னையில் ஆட்டோ தொழிற்சங்கம் ஸ்டிரைக்

சென்னை, மார்ச்.20

ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உயர்த்துவது, கால் டாக்சி செயலிகளைக் கட்டுப்படுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (மார்ச் 19ம் தேதி) போராட்டம் நடத்தப்படும் என தமிழ்நாடு ஆட்டோ, கால் டாக்சி ஓட்டுநர் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்திருந்தது.



இதுகுறித்து தமிழ்நாடு அனைத்து ஆட்டோ தொழிற்சங்க கூட்டமைப்பு தலைவர் பன்னீர்செல்வம் கூறுகையில், "2013ம் ஆண்டுதான் ஆட்டோ மீட்டர் கட்டணம் உயர்த்தப்பட்டது. அப்போது குறைந்தபட்ச தூரத்துக்கு ரூ.25ம், கிலோ மீட்டருக்கு ரூ.12ம் உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. இப்போது விலைவாசி பலமடங்கு ஏறிவிட்டது. அன்றைக்கு ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.55க்கு கிடைத்தது. இன்று ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.102 ஆகிவிட்டது.

எனவே, ஆட்டோ மீட்டர் கட்டணத்தை உடனே உயர்த்தி நிர்ணயிக்குமாறு 19ந் தேதி (இன்று) வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளோம். சென்னை, காஞ்சீபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மட்டும் சுமார் 1.5 லட்சம் ஆட்டோக்கள் ஓடாது. மருத்துவமனை போன்ற அத்தியாவசிய பணிகளுக்கு மட்டும் ஆட்டோ இயங்கும்.

எங்கள் கோரிக்கையை வலியுறுத்தி சென்னை கலெக்டர் அலுவலகம், ராஜரத்தினம் ஸ்டேடியம், அண்ணாசாலை தாராப்பூர் டவர் போன்ற இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறோம். இதில், அனைத்து ஆட்டோ தொழிற்சங்கங்களும் பங்கேற்கின்றன" என்று அவர் கூறினார்.

## பார்வை மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு விரைந்து நிறைவேற்றித்தர வேண்டும்: சீமான் பேச்சு

சென்னை, மார்ச்.20

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,



அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு, மாதாந்திர உதவித்தொகை உயர்வு உள்ளிட்ட பார்வை மாற்றுத்திறனாளி பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்ற மறுப்பது மனவேதனை அளிக்கிறது. ஆட்சிப்பொறுப்பேற்றது முதல், பார்வை மாற்றுத்திறனாளிகளை தெருவில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளியுள்ளது வன்மையான கண்டனத்திற்குரியது.

தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி, சென்னை மாற்றுத்திறனாளி ஆணையரகம் முன்பு அறப்போராட்டம் நடத்திய பார்வை மாற்றுத்திறனாளிகளை, திமுக அரசு காவல்துறை மூலம் அடக்குமுறையை ஏவி, பொய் கூறி ஏமாற்றி அழைத்துச்சென்று கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இறக்கிவிட்டது மனச்சான்றற்ற கொடுங்கோன்மையாகும்.

கடந்த 2022ம் ஆண்டு நவம்பர் மாதம் மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகள் விரைந்து நிறைவேற்றப்படும் என்று தமிழ்நாடு முதல் அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்த நிலையில் இதுவரையில் அவற்றை நிறைவேற்றாமல் ஏமாற்றுவது மாற்றுத்திறனாளி மக்களுக்குச் செய்கின்ற பச்சைத்துரோகமாகும்.

ஆகவே, ★ பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகையை மாதம் 5000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும்.

★ அரசுத்துறைகளில் நிரப்பப்படாமல் உள்ள பணியிடங்களில் புத்தகக் கட்டுநர் போன்ற பணிகளில் பார்வை மாற்றுத்திறனாளிகளை கல்வித் தகுதிக்கேற்ப உடனடியாகப் பணியமர்த்த வேண்டும்.

★ பட்டப்படிப்பு படிக்க முடியாத பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு அரசே தொழிற்பயிற்சி வழங்கி, அரசுப்பணியும் வழங்க வேண்டும்.

★ மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் இயங்கும் சிறப்பு பள்ளிகளில் நிரப்பப்படாமல் உள்ள ஆசிரியர்பணியிடங்களை விரைந்து நிரப்ப வேண்டும்.

★ திருச்சி புத்தூரில் அமைந்துள்ள பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான மகளிர் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வந்த மாணவி இராஜேஸ்வரி அவர்கள் விடுதியில் மர்ம மரணம் அடைந்துள்ளது குறித்து காவல்துறை உரிய நீதி விசாரணை நடத்த வேண்டும்,

என்பது உள்ளிட்ட பார்வை மாற்றுத்திறனாளி சகோதர சகோதரிகளின் நியாயமான கோரிக்கைகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்றித் தர வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் ரூ.2 ஆயிரம் மாதாந்திர ஏ.சி. பேருந்து பயண அட்டை அறிமுகம்

சென்னை மார்ச்.20

சென்னையை பொறுத்தவரை மிக முக்கிய போக்குவரத்து சேவையாக, சென்னை மாநகரப் போக்குவரத்து சேவை இருந்து வருகிறது. சாதாரண பேருந்து, டீலக்ஸ் பேருந்துகள், தாழ்தள பேருந்துகள், ஏ.சி. பேருந்துகள் என பல வகையான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

சென்னை நகரில் இயங்கும் ஆயிரக்கணக்கான பேருந்துகளில் நாள்தோறும் பல லட்சக்கணக்கான பொதுமக்கள் பயணம் செய்து வருகின்றனர். சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் சார்பில் அலுவலகங்கள், கல்லூரிகளுக்கு செல்லும் அன்றாட பயணிகள் பயன்பெறும் வகையில் பல்வேறு பயண சலுகை திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு சாதாரண பேருந்தில் நாள்தோறும் பயணிப்பதற்கான பயண சலுகை அட்டை குறைந்த விலையில் அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் ரூ.2 ஆயிரத்திற்கு மாதாந்திர சலுகைப் பயணச்சீட்டை அமைச்சர் சிவசங்கர் அறிமுகம் செய்துவைத்தார். ரூ.2,000 கட்டணத்தில் ஏ.சி. பேருந்துகள் உட்பட அனைத்து பேருந்துகளிலும் மாதம் முழுவதும் விருப்பம் போல் பயணம் செய்யலாம்.



ஏற்கனவே மாதம் ரூ.1,000 சலுகை அட்டை பயணத்தில் ஏ.சி. பேருந்துகள் தவிர ஏனைய பேருந்துகளில் பயணிக்க வழி வகை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கோடை காலம் தொடங்கி உள்ள நிலையில் சென்னையில் ஏ.சி. பேருந்தில் பயணம் செய்யும் வகையில் மாதாந்திர பயண அட்டை அறிமுகம் செய்யப்பட்டிருப்பது பயணிகள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

# பிரேமலதா விஜயகாந்துக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்த விஜய்



சென்னை, மார்ச்.20

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று தனது 60வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். அவருக்கு பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், பிரேமலதா விஜயகாந்துக்கு தொலைபேசி வாயிலாக பிறந்த வாழ்த்து தெரிவித்துள்ளார்

# மணலி புதுநகர் பொதுமக்கள் பட்டா பெற 3 நாட்கள் சிறப்பு முகாம்

சென்னை, மார்ச்.20

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப் பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை மாநகரம், மணலி புது நகர் திட்டப்பகுதியில் உள்ள பகுதி 1,பகுதி2மற்றும்சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஆகியவற்றால் மனைகள், வீடுகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை உருவாக்கி பொதுமக்களுக்கு ஒதுக்கீடு செய்யப் பட்டது. அவ்வாறு ஒதுக்கீடு பெற்று முழுத் தொகையையும் செலுத்திய ஒதுக்கீடுதாரர்ளுக்கு விற்பனை பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து, தமிழக அரசின் மேலான உத்தரவிற்கு இணங்க மணலி புதுநகர் திட்டப்பகுதியில் உள்ளஒதுக்கீடுதாரர்ளுக்கு வருவாய் துறையிடமிருந்து நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு சிறப்பு முகாம் நடத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின் ஒதுக்கீடுதாரர்கள் இச்சிறப்பு முன் முயற்சியை பயன்படுத்தி தாங்கள் வீட்டு வசதி வாரியத்திடமிருந்து மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து வாங்கிய சொத்திற்கு நில உரிமை ஆவணம் (பட்டா) பெறுவதற்கு ஏதுவாக தாங்கள் விற்பனை பத்திரங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் வருவாய் துறை சார்பாக சிறுவர் மாநகராட்சி பூங்கா, மணலி பகுதி2ல் இன்று மற்றும் 21.03.2025 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 வரையில் நடத்தப்படும் சிறப்பு முகாமில் ஆவணங்களின் நகலினை ஒப்படைத்து பட்டா பெறுவதற்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு ஒதுக்கீடுதாரர்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் ஏற்கனவே மேற்காணும் திட்டப்பகுதியில் பட்டா பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பம் அளித்திருந்தால் மீண்டும் விண்ணப்பம் அளிக்க வேண்டாம் எனவும் ஒதுக்கீடுதார்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# கொலை முயற்சி வழக்கில் குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை: நெல்லை நீதிபதி தீர்ப்பு

நெல்லை, மார்ச்.20

நெல்லை மாவட்டம், செங்குளம் வடக்கு தெருவை சேர்ந்த கணபதி மகன் மாரிமுத்து (வயது 28) என்பவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த சேர்மன் மகன் இசக்கிதாஸ் (வயது 27) என்பவருக்கும் இடையே கடந்த 2017ம் ஆண்டு தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் 2017 மார்ச் 19ம் தேதி மாரிமுத்து செங்குளம் வடக்கு தெரு பாலர் வாடி அருகே நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த இசக்கிதாஸ், மாரிமுத்துவிடம் தகராறில் ஈடுபட்டு அவதூறாக பேசி அரிவாளால் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார்.

இதுகுறித்து மாரிமுத்து முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் முன்னீர்பள்ளம் காவல் துறையினர் கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து இசக்கிதாஸை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் இன்று (18.3.2025) இவ்வழக்கை விசாரித்த நீதிபதி அமிர்த வேலு தீர்ப்பளித்தார். அப்போது குற்றவாளி இசக்கிதாஸ்க்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.4,000 அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் திறம்பட விசாரணை செய்து சாட்சிகளை விரைவாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று கொடுத்த சேரன்மகாதேவி டி.எஸ்.பி. சத்யராஜ் மற்றும் காவல் துறையினரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற கொலை முயற்சி போன்ற முக்கிய வழக்குகளின் விசாரணைகளை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவின் படி அனைத்து உட்கோட்ட டி.எஸ்.பி.க்களும் நேரடியாக கண்காணிக்கின்றனர். வழக்குகளின் விசாரணையின் போது சாட்சிகளுக்கு முழு அளவில் பாதுகாப்பளித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காவல்துறையின் இந்த நடவடிக்கையால் 2025ம் ஆண்டு மட்டும் இதுவரை 6 கொலை முயற்சி வழக்குகளில் 7 குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்துள்ளது.

# நெல்லை: வேலை செய்த ஓட்டலில் ரூ.1 லட்சம் திருடிய ஊழியருக்கு 2 ஆண்டு சிறை

நெல்லை, மார்ச்.20

திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து அருகே பூந்தோட்ட தெருவை சேர்ந்த செல்லதுரை (வயது 48) என்பவர் தாழையூத்து பஸ் ஸ்டாப் அருகே ஹோட்டல் வைத்து நடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் 2020ம் ஆண்டு நவம்பர் 10ம் தேதி இரவு வழக்கம் போல் தனது கடையை பூட்டிவிட்டு சென்றுள்ளார். பின்பு மறுநாள் காலையில் வந்து கடையை திறந்து பார்க்கும் பொழுது கடையில் வைத்திருந்த ரூ.1,02,000 பணத்தைகாணவில்லை.

இதுகுறித்து செல்லதுரை தாழையூத்து காவல் நிலையத்தில் அளித்த புகாரின்பேரில் தாழையூத்து காவல் துறையினர் திருட்டு வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் செல்லத்துரை நடத்தி வரும் ஹோட்டலில் பணிபுரியும் மானூர், குறிச்சிகுளம், வடக்கு தெருவை சேர்ந்த சேக் மைதீன் (வயது 35) என்பவர் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்து. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவ்வழக்கு விசாரணை திருநெல்வேலி மாவட்ட 3வது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், நேற்று (17.03.2025) இவ்வழக்கை விசாரித்த நீதிபதி விஜயராஜ்குமார், குற்றவாளி சேக்மைதீனுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.1000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். இவ்வழக்கில் திறம்பட விசாரணை செய்து சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வழக்கில்தொடர்புடைய நபருக்கு தண்டனை பெற்றுக் கொடுத்த தாழையூத்து உட்கோட்ட டி.எஸ்.பி. ரகுபதி ராஜா மற்றும் காவல் துறையினரை திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் பாராட்டினார்.

# தமிழ்நாடு மாநில வளர்ச்சிக்கடன் நிலுவைத்தொகை வட்டியுடன் திருப்பி செலுத்தப்படும் நிதித் துறை தகவல்

சென்னை, மார்ச்.20

தமிழக அரசின் நிதித் துறை சார்பில் வெளியிடப் பட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு அரசு நிதித்துறையின் 9.4.2015 ஆம் நாளிட்ட அறிவிக்கையின் வரையறைகளின் படி வழங்கப்பட்ட 8.06 சதவீதம் தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன் 2025 நிலுவைத் தொகையானது 153 2025 அன்று 14.3.2025ம் நாள் உட்பட்ட உரிய நாளது வரையிலான வட்டித் தொகையுடன் திருப்பிச் செலுத்தப்படும் என்று பொதுத் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது.

15.3.2025ம் நாளிலிருந்தும் அதற்கு பின்னரும் இக்கடனுக்கு வட்டித் தொகை சேராது.

2. 2007ஆம் ஆண்டு அரசு கடன் பத்திரங்களின் ஒழுங்குமுறை விதிகளின்படி, பொது துணை பேரேட்டு படிவத்தில் அல்லது மூலப் பொது துணைப் பேரேட்டு கணக்கில் அல்லது பங்கு முதல் சான்றிதழில், அரசு கடன் பத்திரங்களை வைத்திருக்கும் பதிவு பெற்ற நபர் ஒருவருக்கு, அவருடைய வங்கி கணக்கில் அல்லது மின்னணு பதிவு மூலம் நிதிகளை வரவு வைக்கும் வசதியுள்ள யாதொரு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் அவருடைய வரவுக் கணக்கில் உரிய விவரங்களை சேர்த்து, தொகை செலுத்துவதற்கான ஆணை வழங்குவதன் மூலம் முதிர்வுத் தொகை வழங்கப்படும்.

வங்கிக் கணக்கில் உரிய விவரங்கள் இல்லாத/மின்னணு மூலம் நிதிகளை வரவுவைப்பதற்குஆணை பிறப்பிக்கப்படாத நேர்வில், உரிய நாளில் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக, 8.06 சதவீதம் தமிழ்நாடு மாநில வளர்ச்சிகடன், 2025 தொடர்பான கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்கள், அவர்களுடைய கடன் பத்திரங்களை, 20 நாட்களுக்கு முன்னதாகவே, பொதுக் கடன் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்காக கொடுக்கப்படும் கடன் பத்திரங்களின் பின் பக்கத்தில், உரியமுறையில் எழுதி கையொப்பமிட வேண்டும்.

பாரத ஸ்டேட் வங்கியின் கிளை ஒன்றில் கருவூலப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களில், இக்கடன் பத்திரங்கள், பங்கு முதல் சான்றிதழ்கள் வடிவில் இருக்குமாயின், சம்பந்தப்பட்ட வங்கியின் கிளையில்தான் ஒப்படைக்க வேண்டுமே தவிர கருவூலத்திலோ அல்லது சார் கருவூலத்திலோ ஒப்படைக்கக்கூடாது என்பதை குறிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

கடன் தொகை திருப்பிச் செலுத்தக் கோரி, கடன் பத்திரங்கள் முகப்பிடப்பட்டுள்ள இடங்கள் நீங்கலாக பிற இடங்களில் தொகையைப்பெறவிரும்புவோர், கடன் பொறுப்பைத் தீர்க்கும் வாசகத்தை அப்பத்திரங்களின் பின்புறம் உரியவாறு எழுதி கையொப்பமிட்டு, சம்மந்தப்பட்ட பொதுக்கடன் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மற்றும் காப்புறுதி அஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். தமிழ்நாடு மாநிலத்தில், அரசு கருவூலகப் பணிகளை மேற்கொள்கின்ற யாதொரு கருவூலம் / சார் கருவூலம் அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் கிளைகளில் செலுத்தத் தக்க கேட்புக் காசோலை ஒன்றை வழங்குவதன் மூலம், பொதுக் கடன் அலுவலகம், தொகை வழங்கும்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.

# கூட்ட நெரிசலால் உயிரிழந்த ஓம் குமார் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிவாரணம்: அண்ணாமலை வலியுறுத்தல்



சென்னை, மார்ச்.20

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

திருச்செந்தூர் கோவிலில், கூட்டநெரிசலால் உயிரிழந்த, காரைக்குடியைச் சேர்ந்த ஓம் குமார் அவர்களின் மனைவி எழுதியதாக, அமைச்சர் சேகர் பாபு கூறிய கடிதத்தைப் படித்துப் பார்த்தேன்.

அந்தக் கடிதத்தின் சில வரிகளை கோடிட்டுக் காட்டியுள்ளேன். இப்படி ஒரு கடிதம் கொடுத்தால் தான் இறந்தவரின் உடலைக் கொடுப்போம் என்ற வற்புறுத்தலின் பெயரில் எழுதப்பட்ட கடிதம் போல் உள்ளது.

மறைந்த ஓம் குமாரின் குடும்பத்தார் மேலும், தனியார் ஊடகத்தில், நேற்று அளித்த நேர்காணலைப் பார்த்தேன். கடிதத்தில் உள்ள விவரங்களுக்கும், அவர்கள் ஊடகத்தில் தெரிவித்ததற்கும் எத்தனை முரண்கள்.

தங்கள் ஆட்சியின் கையாலாகாத்தனத்தை மறைக்க, பொதுமக்கள் உயிரை மலிவாக எண்ணும் அமைச்சர் சேகர் பாபு, அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்பதை உணர்ந்தால் நன்று.

கூட்ட நெரிசலில் உயிரிழந்த ஓம் குமார் அவர்களின் குடும்பத்தாருக்கு, 10 லட்ச ரூபாய் நிவாரணமாக, தமிழக அரசு உடனடியாக, வழங்கவேண்டும் என்றும், இனியும் கோவில்களில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்காமல் இருக்க, முறையான ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், தி.மு.க அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிளஸ்2 மாணவிக்கு பாலியல் தொல்லை: டியூசன் ஆசிரியர் போக்சோவில் கைது



கடலூர், மார்ச்.20

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் அடுத்த மங்கலம்பேட்டை பகுதியை சேர்ந்தவர் ராயர் மகன் வெங்கடேசன் (42). இவர் அதே பகுதியில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக டியூசன் சென்டர் வைத்து மாணவ, மாணவிகளுக்கு பாடம் நடத்தி வருகிறார். இங்கு விருத்தாசலம் பகுதியை சேர்ந்த 17 வயதுடைய மாணவி கடந்த சில நாட்களாக படித்து வந்துள்ளார். இந்த நிலையில் சம்பவத்தன்று டியூசனுக்கு வந்த மாணவிக்கு, வெங்கடேசன் பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவி, தனக்கு நேர்ந்த கொடுமை குறித்து பெற்றோரிடம் கூறி அழுதுள்ளார். தொடர்ந்து இதுகுறித்து மாணவி விருத்தாசலம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார்அளித்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி மற்றும் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து வெங்கடேசனை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அரசு பள்ளிகளில் இன்று ஒரே நாளில் மட்டும் 9,100 மாணவர்கள் சேர்க்கை: பள்ளிக்கல்வித்துறை



சென்னை, மார்ச்.20

தமிழ்நாடு முழுவதும் உள்ள 37 ஆயிரத்து 553 அரசு பள்ளிகளில் கடந்த 1ந்தேதிமாணவர்சேர்க்கை தொடங்கியது. மாணவர் சேர்க்கையை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து அனைத்து அரசு பள்ளிகளிலும் மாணவர் சேர்க்கை விறுவிறுப்பாக தற்போது வரை நடந்து வருகிறது. இதில் பெரும்பாலும் 1ம் வகுப்புக்கு தான் மாணவர் சேர்க்கை நடக்கிறது. கடந்த 1ந்தேதி முதல் இன்று வரையிலான 18 நாட்களில்வந்த12வேலை நாட்களில் இந்த மாணவர் சேர்க்கை நடந்துள்ளது. இன்று ஒரே நாளில் மட்டும் 9,100 மாணவர்கள் சேர்ந்துள்ளனர் என்றும் மொத்தம் 81 ஆயிரத்து 797 மாணவர்கள் சேர்ந்துள்ளதாகவும் பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது.

அரசு பள்ளிகளில் அதிகரிக்கும் நோக்கில், பல்வேறு முயற்சிகள் பள்ளிக் கல்வித் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி அங்கன்வாடி மையங்களில் படித்து முடிக்க இருக்கும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளின் பட்டியலை சேகரித்து அந்தந்த மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு வழங்கி, அவர்களையும் அரசு பள்ளிகளில் சேர்க்கும் வகையில் நடவடிக்கையை பள்ளிக்கல்வித்துறை எடுத்து வருகிறது. 5 லட்சம் மாணவர் சேர்க்கை என்ற இலக்கை நோக்கி முன்னேற வேண்டும் என்ற அறிவுறுத்தலையும் ஆசிரியர்களுக்கு கல்வித்துறை வழங்கி இருக்கிறது.

# தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் நீக்கம்



தர்மபுரி, மார்ச்.20

தருமபுரி கிழக்கு மாவட்டதி.மு.க.பொறுப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

தருமபுரி கிழக்கு மாவட்டதி.மு.க.பொறுப்பாளராக செயல்பட்டு வந்தவர் தர்மசெல்வன். இவர் கடந்த சில நாட்களுக்கு முன் தருமபுரியில் நடைபெற்ற தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இந்தகூட்டத்தில்பேசிய தர்மசெல்வன், மாவட்ட கலெக்டர், மாவட்ட எஸ்.பி. என யாராக இருந்தாலும் நான் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் என பேசினார். அவரது பேச்சு தொடர்பான காணொலி சமூகவலைதளத்தில் வைரலானது. மாவட்ட கலெக்டர், எஸ்.பி. ஆகியோரை மிரட்டும் வகையில் தி.மு.க. பொறுப்பாளர் பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் தர்மசெல்வன் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், தருமபுரி கிழக்கு மாவட்டதி.மு.க.பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட தர்மசெல்வன் அப்பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதிலாக மணி தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்' என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# தொகுதி மறுசீரமைப்புக்கு எதிரான கூட்டத்தில் யார் யார் பங்கேற்பு? வெளியான தகவல்



சென்னை, மார்ச்.20

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக வருகிற 22ம் தேதி முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பங்கேற்க 7 மாநில முதல் மந்திரிகளுக்கு மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதினார். மேலும் அமைச்சர்கள், எம்.பி.க்கள் அடங்கிய குழுவினர் அந்தந்த மாநிலங்களுக்கு நேரில் சென்று முதல்மந்திரிகள், மாநில கட்சிகளின் நிர்வாகிகளை சந்தித்துகடிதத்தைவழங்கி அழைப்பு விடுத்தனர்.

இந்த நிலையில், தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக நடைபெறும் கூட்டத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் அழைப்பை ஏற்று கேரளா, தெலங்கானா, பஞ்சாப் ஆகிய 3 மாநில முதல்மந்திரிகள் பங்கேற்கின்றனர் என்றும் கர்நாடகா சார்பில் துணை முதல்அமைச்சர் டி.கே.சிவகுமார் பங்கேற்கிறார் என்று திமுக திமுக மருத்துவர் அணி செயலாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

பங்கேற்பவர்களின் விவரம்:

கேரளா:பினராயி விஜயன், கேரள முதலமைச்சர்

மார்க்சிஸ்ட் கோவிந்தம் (சிபிஎம்) பினோய் விஸ்வம், முன்னாள் எம்.பி (சிபிஎம்) கும்பகுடி சுதாகரன் (காங்கிரஸ்) பி.ஜே. ஜோசப், கேரளஎம்.எல்.ஏ (கேரளா காங்கிரஸ்) ஜோஸ் கே.மணி, எம்.பி. (கேரளா காங்கிரஸ்)

பி.எம்.ஏ. சலாம், ஐ.யு.எம்.எல். (IUML) பொதுச் செயலாளர் என்.கே.பிரேமச்சந்திரன், புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி

ஆந்திரா: மிதுன் ரெட்டி, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் எம்.பி. தெலங்கானா: முதல்மந்திரி ரேவந்த் ரெட்டி கே.டி.ராமாராவ், பி.ஆர்.எஸ். வினோத் குமார், பி.ஆர்.எஸ். ஒவைஸியின் ஏ.ஐ.எம்.ஐ.எம் (AIMIM) கட்சி

கர்நாடகா: டி.கே.சிவகுமார், துணை முதல்மந்திரி

மேற்கு வங்கம்: திரிணாமூல் காங்கிரஸ் கட்சி முகமது சலீம் (சிபிஎம்) சுபாங்கர் சர்கார் (காங்கிரஸ்)

ஒடிசா: பிஜு ஜனதா தளம்ப க்த சரண் தாஸ், காங்கிரஸ்ப

ஞ்சாப்: முதல்மந்திரி பகவந்த் மான், (ஆம் ஆத்மி) அமரிந்தர் சிங் வாரிங், (காங்கிரஸ்) பல்விந்தர் சிங், (அகாலி தளம்) தல்ஜித் சிங், (அகாலி தளம்)

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

20.3.2025

# தூத்துக்குடியில் முத்தாரம்மன் கோவில் முளைப்பாரி ஊர்வலம்



தூத்துக்குடி, மார்ச்.20

தூத்துக்குடி ராஜகோபால் நகர் பகுதியில் உள்ள முத்தாரம்மன் கோவில் 32ம் ஆண்டு கொடை விழாவையொட்டி கடந்த 11ம் தேதி கால்நட்டு விழாவுடன் தொடங்கி 16ம் தேதி காலை 5 மணிக்கு மங்கள இசை, திருமறை பாராயணம், தேவதா அனுக்ஞை, விக்னேசுவர பூஜை, ஸ்கல்பம், புண்காய வாஜனம், பஞ்ச கவ்யசுத்தி, கும்ப பூஜை, மகா கணபதி பூஜை, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரம்மச்சாரிய பூஜை, கோபூஜை நடைபெற்று. பின்னர்காலை10மணிக்கு நவநாயகம் வழிபாடு, நவக்கிரக ஹோமம், சுதர்சன ஹோமம், மிருத்யுஞ்ஜய ஹோமம், மகாலட்சுமி ஹோமம், பூர்ணாகுதி முத்தாரம்மனுக்கு சிறப்பு அபிஷேகம்,மற்றும் வருஷாபிஷேக தீபாராதனை நடைபெற்று மதியம் அன்னதானம், இரவு 201 திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

பின்னர்திங்கள்கிழமை 17ம் தேதி மாலை 3 மணிக்கு முத்தாரம்மன் தீர்த்தகரை செல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு 7 மணிக்கு சிறப்பு பூஜை நடைபெற்று இன்னிசை கச்சேரி நடைபெற்றது. 18ம் தேதி செவ்வாய் கிழமை காலை டூவிபுரம் பாரதசித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து 108 பால்குடம் எடுத்து ஊர்வலமாக வந்து முத்தாரம்மனுக்கு பாலஅபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மதிய கொடையை முன்னிட்டு அன்னதானம் நடைபெற்றது. பின்னர் இரவு முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது. விழாவுக்கான ஏற்பாடுகளை முத்தாரம்மன் கோவில் கொடைவிழா கமிட்டியளார்கள் மற்றும் ராஜகோபால்நகர் ஊர் மக்கள் மற்றும் விழாக்குழுவினர் செய்து உள்ளனர்.

# கோரிக்கை ஏற்காவிட்டால் சங்கு ஊதும் போராட்டம் தமிழர் விடுதலைக்களம் அறிவிப்பு



நெல்லை மாவட்டம் மானூர் ஊராட்சி ஒன்றியம், தென்பத்து சிற்றூராட்சியில் சீரான போர்வெல் குடிநீர் வேண்டியும், பராமரிப்பின்றி வீணடிக்கும் நோக்கோடு கிடக்கும் சோலார் மின் இணைப்பு பேனல்களை சரிசெய்திட கோரி நெல்லை மாவட்ட நிர்வாகத்திற்கும், மானூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கும் கோரிக்கைகள் அளித்தும் நடவடிக்கை எடுக்க மறுப்பதை கண்டித்து, தமிழர்விடுதலைக் களத்தின் கோரிக்கையை நெல்லை மாவட்ட நிர்வாகத்தின் காதுகளுக்கு கேட்கும் வண்ணம் நெல்லை மாவட்ட தமிழர் விடுதலைக்களம் சார்பில் வருகிற 23032025 அன்று சங்கு ஊதும் போராட்ட அறிவிப்பு என மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது

அம் மனுவில் கூறியிருப்பதாவது

திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம், தென்பத்து சிற்றூராட்சி, சொக்கட்டான் தோப்பு கிராமத்தில் 200 குடும்பங்கள் தேவேந்திர குல வேளாளர் சமுதாய மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதிக்கு கடந்த அ.தி.மு.க ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட தாய்திட்டத்தின் கீழ் கட்டபட்ட மேல்நிலை குடிநீர் தேக்க தொட்டியின் மூலமாய் போர்வெல் குடிநீர் சப்ளை செய்யப்படுகிறது, மேலும் இப்பகுதியில் உள்ள இரண்டு சுகாதார வளாகங்களுக்கும் இதன் மூலம் தண்ணீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது. போர்வெல் குடிநீர் மோட்டார் இயக்குவதற்கான மின்சாரம் நீண்ட ஆண்டுகளாக சோலார் மூலமாகவே இயக்கப்பட்டு வந்தது, தற்போது 1 மாத காலமாக போர்வெல் குடிநீர் சம்பந்தபட்ட மோட்டார்கள் பழுதாகி சொக்கட்டான் தோப்பு முழுவதும் போர்வெல் குடிநீர் சப்ளை தடைபட்டுள்ளது.

இதனால் சொக்கட்டான் தோப்பு மக்கள் பெருந்துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் இது குறித்து மானூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திடமும் பலமுறை வட்டார வளர்ச்சி அலுவலரிடமும் தொலைபேசி வாயிலாக நடவடிக்கை எடுக்க வேண்டப்பட்டது. நெல்லை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் கடந்த 10.3.2025 அன்று மக்கள் குறை தீர்க்கும் முகாமில் திருநெல்வேலி மாவட்ட தமிழர் விடுதலைகளம் சார்பில் கோரிக்கை மனு அளிக்கபட்டது, நேற்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் கோரிக்கை என்பதால் நெல்லை மாவட்ட நிர்வாகத்திற்கும் மானூர் ஒன்றிய நிர்வாகத்திற்கும் கேட்கவில்லை என எண்ணுகிறோம். ஆதலால் இக்கோரிக்கையை வலியுறுத்தி போராடுவதை தவிர எங்களுக்கு வேறு வழியில்லை என எண்ணுகிறோம்.

ஆதலால் எங்கள் கோரிக்கையை நெல்லை மாவட்ட நிர்வாகத்தின் காதுகளுக்கு கேட்கும் விதமாக நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக வாசலில் திருநெல்வேலி மாவட்ட தமிழர் விடுதலைக்களம் சார்பில் வருகிற 23032025 அன்று சங்கு ஊதும் போராட்டத்தினை முன்னெடுக்க இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என குறிப்பிட்டுள்ளனர்

# தர்மபுரி தி.மு.க. கிழக்கு மாவட்ட செயலாளர் மாற்றம் புதிய மாவட்டமாக மணி M.P. நியமனம்



தர்மபுரி, மார்ச்.20

தர்மபுரி கிழக்கு தி.மு.க மாவட்டசெயலாளராக10 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த தடங்கம் சுப்பிரமணிதிடீரென மாற்றப்பட்டு இவருக்கு பதிலாக பிப்ரவரி23ம் தேதி புதிய மாவட்ட செயலாளராக தர்ம செல்வம் நியமிக்கப்பட்டார்

இவர் நியமிக்கப்பட்டவு டன் ஆடியோ ஒன்று முன்னாள் மாவட்ட செயலாளர் இன்ப சேகரன் தேர்தலில் வெற்றி பெறக் கூடாது என்பதற்காக இவர் மாற்றுக் கட்சியினருடன் கூட்டணி அமைத்து பேசிய ஆடியோ வெளியாகி அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்தது

இந்த நிலை இருந்தபோது மாவட்ட பொறுப்பாளர் பதவிக்கு வந்த உடனேயே கட்சியினருடன் தனியார் விடுதியில் இவர் பேசிய மிரட்டல் ஆடியோ அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்தது ,அதில் கலெக்டர்,காவல்துறை எஸ்பி மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அதிகாரிகளும் கட்சியினரும் இவர் சொல்வதைத் தான் கேட்க வேண்டும் இல்லை என்றால் பதவியில் அவர்கள் இருக்க முடியாது எனமிகக்கடுமையாக அச்சுறுத்து வகையில் பேசியது அரசு ஊழியர்களை மட்டுமின்றி பொதுமக்களையும் அதிர்ச்சி அடைய வைத்தது

தொடர்ந்து கட்சியினர் நடத்தும் கூட்டத்திலும் கட்சி பொறுப்பாளர்களை மிரட்டும் தோணிலேயே இவரது செயல்பாடுகள் தொடர்ந்து இருந்து வந்தது , இச்சம்வத்திற்கு எதிர்க்கட்சிகள் அரசு ஊழியர்கள் என அனைத்து தரப்பிலிருந்தும் இவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கை வலிமையாக எதிரொலிக்க தொடங்கியது, எந்த நிமிடமும்இவர்பதவி காலியாகும் என்று எதிர்பார்த்த நிலையில்திமுக தலைமை அடாவடி பேச்சு தர்மசெல்வனை மாவட்ட பொறுப்பில் இருந்து நீக்கியது

இவருக்கு பதிலாக தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் அ .மணிபுதிய தருமபுரி கிழக்குமாவட்ட தி.மு.க பொறுப்பாளராக அறிவித்துள்ளது

அறிவிப்பு வெளியான உடனேயே தொண்டர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை மீண்டும் ஏற்பட்டுள்ளது

இதுகுறித்து கட்சியினர் தெரிவிக்கையில்

தற்போது தருமபுரிகிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள ஆ. மணிதர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார் தற்போது இவருக்கு கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் பதவி கொடுத்துள்ளதால் மேற்கு மாவட்டத்தில் உள்ள கட்சிப் பொறுப்பாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் மணியிடம் உதவிகள் கேட்டுச் சென்றால் மேற்கு மாவட்ட செயலாளர் பி பழனியப்பன் தரப்பினர் கோபித்துக் கொள்வார்கள் கட்சியினர் இரு மாவட்டங்களிலும் போஸ்டர்கள் விளம்பரங்கள் செய்யும் போது நாடாளுமன்றஉறுப்பினர்என்பதால் இவரை இரு மாவட்டங்களிலும் முன்னுரிமை கொடுத்து எந்த இடத்தில் இவரது புகைப்படத்தை வைக்க வேண்டும் என்பதில் பெரும் குழப்பம் ஏற்படும்

இதனால் கட்சி தொண்டர்கள் மத்தியில் அதிருப்தி தான் அதிகமாகி வரும் ,இரு மாவட்டத்திலும்உள்ள கட்சி பொறுப்பாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இவரை எப்படி தொடர்பு கொண்டாலும் அது தேவையில்லாத சர்ச்சையை தான் ஏற்படுத்தும் இந்த பிரச்சனையிலிருந்து கட்சித் தொண்டர்கள் எங்களுக்கு தான் தலைவலி என இப்போது பேச தொடங்கியுள்ளனர்

அதேபோல மாவட்ட அரசு நிர்வாகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் இவர் எடுத்துச் செல்லும் கோரிக்கைகள் எவ்வாறு பரிசளிக்கப்படும் என்பதும் குழப்பத்தையே ஏற்படுத்தும், என கட்சியின் மூத்த பொறுப்பாளர்கள் தொண்டர்கள் புலம்புகின்றனர்

தர்மபுரிமாவட்டத்தில் திமுக ,அதிமுக ,பாமக, விடுதலை சிறுத்தைகள் கட்சி என நான்கு கட்சிகளும் பெரும் பலத்துடன் வாக்கு வங்கியை மாவட்டத்தில் வைத்திருக்கின்றனர்

தமிழகத்திலேயே வெற்றி வாய்ப்புகள் அரசியல் கட்சிகளுக்கு எப்படி இருந்தாலும், தர்மபுரியில் எப்போதும் எதிரான ஒரு நிலைப்பாடு தொடர்ந்து தேர்தலில் எதிரொழித்து வருகிறது

வெற்றி வாய்ப்பு என்பதில் திமுக அதிமுகவிற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஆதரவு இல்லாமல் தனியாக வெற்றி பெற முடியாது என்ற நிலை இருந்து வருகின்றது

2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வரை இருக்கும் நிலையில் தர்மபுரி திமுகவில் தொடர்ந்து கோஷ்டி பூசல்கள் வலிமையாகி வருகிறது,சர்ச்சைகளும் தொடர்ந்து விரட்டிக்கொண்டே வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

# வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடுமண் பதக்கம், இரும்பு கண்டெடுப்பு

சென்னை, மார்ச்.20


விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அகழாய்வில் இதுவரை 20 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இதில் இருந்து ஏராளமான சங்கு வளையல்கள், சில்லு வட்டுகள், கல்மணிகள், கண்ணாடி மணிகள், செவ்வந்தி கல், சுடுமண்ணால் செய்யப்பட்ட ஆபரணங்கள், சதுரங்க ஆட்ட காய்கள், பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட செங்கல், சேர நாட்டு செப்பு காசுகள், வேட்டைக்கு பயன்படுத்தப்பட்ட கருவிகள் உட்பட 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், வெம்பக்கோட்டை அகழாய்வில் சுடு மண்ணால் ஆன அலங்கரிக்கப்பட்ட பதக்கம் மற்றும் இரும்பு, ஈயம் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது குறித்து அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில்,

"விருதுநகர் வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்ட அகழாய்வில், 87 சென்டிமீட்டர் ஆழத்தில் சுடு மண்ணால் ஆன அலங்கரிக்கப்பட்ட பதக்கம் மற்றும் இரும்பு கிடைத்துள்ளது. மேலும், முதல்முறையாக 102 சென்டிமீட்டர் ஆழத்தில் ஈயம் கிடைத்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்மக்கள் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய பதக்கங்கள் மற்றும் இதர கலைப்பொருட்களைப் பயன்படுத்தியுள்ளதை உறுதிசெய்யும் வகையில் கிடைக்கப்பெற்றுள்ள இந்த புதிய கண்டுபிடிப்புகளை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி" என்று தெரிவித்துள்ளார்.

# 4 வருடங்களுக்கு பிறகு கதாநாயகனாக நடிக்கும் சுஷாந்த்





பிரபல தெலுங்கு நடிகர் காளிதாசு சுஷாந்த் அனுமோலு. இவர் கடந்த 2009ம் ஆண்டு வெளியான 'காளிதாசு' படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார். அதனைத்தொடர்ந்து, பல படங்களில் நடித்திருந்த இவர் கடைசியாக 2021ம் ஆண்டு வெளியான 'இச்சட வாகனமுலு நீலப்பரடு' படத்தில் நடித்தார்.

அதன்பிறகு, முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்காத இவர் ரவி தேஜாவின் 'ராவணாசுரன்' மற்றும் சிரஞ்சீவியின் 'போலா ஷங்கர் 'ஆகிய படங்களில் சிறப்பு வேடங்களில் நடித்தார்.

இந்நிலையில், நேற்று சுஷாந்த்தின் பிறந்தநாளை முன்னிட்டு அவர்நடிக்கும்புதியபடத்தின்பர்ஸ்ட்லுக்வெளியாகி இருக்கிறது. சுமார்4ஆண்டுகளுக்குப்பிறகு,சுஷாந்த்கதாநாயகனாகநடிக்கிறார். தற்காலிகமாக எஸ்.ஏ 10 என பெயரிடப்பட்டுள்ள இந்த படத்தை அறிமுக இயக்குனர் பிருத்விராஜ் சித்தேட்டி இயக்குகிறார்.

சஞ்சீவனி கிரியேஷன்ஸ் பேனரின் கீழ் வருண் குமார் மற்றும் ராஜ் குமார் ஆகியோர் இப்படத்தை தயாரிக்கின்றனர். வரும் நாட்களில் படத்தில் நடிக்கும் நடிகை, நடிகர்கள் மற்றும் குழுவினர் பற்றிய விவரங்கள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரபாஸின் 'கல்கி 2898 ஏடி 2' முக்கிய அப்டேட்களை பகிர்ந்த நாக் அஸ்வின்




நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரபாஸ் கர்ணனாக நடித்த திரைப்படம் 'கல்கி 2898 ஏடி'. 600 கோடி ரூபாய் பட்ஜெட்டில் உருவான இத்திரைப்படத்தில், அஸ்வத்தாமாவாக அமிதாப் பச்சன், யாஸ்கினாக கமல்ஹாசன், கிருஷ்ணராக கிருஷ்ணகுமார் பாலசுப்பிரமணியன், தீபிகா படுகோன், திஷா பதானி, அன்னா பென் உள்பட பல பிரபலங்கள் நடித்தனர்.

இப்படம் கடந்த ஆண்டு ஜூன் மாதம் 27ம் தேதி தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம் உள்பட பல்வேறு மொழிகளில் வெளியானநிலையில், உலகம் முழுவதும் ரூ,1,100 கோடிக்கு மேல் வசூல் ஈட்டியது. தற்போது இதன் 2ம் பாகப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

கல்கி முதல் பாகத்தின் வெற்றியில் இருந்தே, அனைவரின் பார்வையும் 2ம் பாகத்தை நோக்கியே உள்ளது. இந்நிலையில், சமீபத்திய நேர்காணல் ஒன்றில், கல்கி 2 பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்களை இயக்குனர் நாக் அஸ்வின் பகிர்ந்துள்ளார். அதன்படி, இந்த ஆண்டு இறுதியில் படத்தை தொடங்க திட்டமிட்டுள்ளதாக கூறினார். தொடர்ந்து, முதல் பாகத்தில் குறைவான நேரம் திரையில் தோன்றிய பிரபாஸ் இரண்டாம் பாகத்தில் அதிக நேரம் காணப்படுவார் எனவும், ஏனென்றால் இது கர்ணன் மற்றும் அஸ்வத்தாமா கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டது எனவும் கூறினார்.

# 'கிங்டம்' விஜய் தேவரகொண்டாவின் சகோதரராக நடிக்கும் பிரபல நடிகர்?




தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர்விஜய்தேவரகொண்டா. இவர்கீதாகோவிந்தம், அர்ஜுன் ரெட்டி உள்ளிட்ட படங்களின் மூலம் ரசிகர்கள் மனதில் இடம் பிடித்தவர். இவர் கடைசியாக 'பேமிலி ஸ்டார்' திரைப்படத்தில் நடித்திருந்தார்.

விஜய் தேவரகொண்டா தன்னுடைய 12வது திரைப்படத்தில் நடித்து வருகிறார். இப்படத்திற்கு 'கிங்டம்' எனபொபெயரிடப்பட்டுள்ளது. கவுதம் தின்னனுரி இயக்கும் இந்த படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட், பார்ச்சூன் போர் சினிமாஸ் ஆகிய நிறுவனங்கள் இணைந்து தயாரித்து இருக்கிறது.

இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கும் இப்படத்தில் பாக்யஸ்ரீ போர்ஸ், சத்யதேவ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்நிலையில் சத்யதேவ் இப்படத்தில் விஜய்தேவர்கொண்டாவின் சகோதரராக நடிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

# மியாமி டென்னிஸ்: முதல் சுற்றில் கேத்ரினா சினியகோவா வெற்றி



மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவின் புளோரிடாவில் நேற்று தொடங்கியது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் கேத்ரினா சினியகோவா (செக்குடியரசு), யு யுவானை (சீனா) சந்தித்தார்.

இந்த ஆட்டத்தில் 6-2, 2-6, 7-6 (4) என்ற செட் கணக்கில் யு யுவானை (சீனா) வீழ்த்தி கேத்ரினா சினியகோவாவெற்றிபெற்றார்.மற்றொருஆட்டத்தில் போலந்தின் லினெட் 7-6 (3), 6-2 என்ற நேர் செட்டில் ரஷியாவின் பாவ்லிசென்கோவை வீழ்த்தினார்.

# இந்திய கிரிக்கெட் வாரியத்தின் அவசர கூட்டம்: 22ந்தேதி நடக்கிறது




இந்திய கிரிக்கெட் வாரியத்தின் அவசர உயர்மட்ட குழு கூட்டம் வருகிற 22ந்தேதி கொல்கத்தாவில் நடக்கிறது. இதில் இந்தியாவில் அக்டோபர் மாதம் நடக்கும் மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி குறித்து ஆலோசிக்கப்படுகிறது. போட்டிக்கான இடம், அட்டவணை எதுவும் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

உலகக் கோப்பை போட்டிக்கான இடத்தை தேர்வு செய்ய ஒருங்கிணைப்பு கமிட்டி அமைக்கப்படுகிறது. இதே போல் 2025-26ம் ஆண்டு உள்ளூர் போட்டிக்கான அட்டவணையும் கூட்டத்தில் இறுதி செய்யப்படுகிறது.

ஐ.பி.எல். போட்டியின் போது, மதுபானம், புகையிலை சம்பந்தமானவிளம்பரங்களைதடை செய்யும்படி மத்திய சுகாதாரத்துறை இந்திய கிரிக்கெட் வாரியத்தை அறிவுறுத்தியது. அது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

# 'பவர்பிளே'யில் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியம் பாகிஸ்தான் கேப்டன்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற்றிருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது போட்டி டுனெடினில் நேற்று நடைபெற்றது. மழை காரணமாக இந்த போட்டி 15 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதில் டாஸ் வென்ற நியூசிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த பாகிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 135 ரன்கள் அடித்தது. இதனையடுத்து 136 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து 13.1 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்கள் அடித்து எளிதில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் நியூசிலாந்து 20 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இந்நிலையில், நேற்றைய ஆட்டத்தில் தோல்வி கண்ட பின்னர் பாகிஸ்தான் கேப்டன் சல்மான் ஆஹா கூறியதாவது,

கடந்த ஆட்டத்துடன் ஒப்பிடுகையில் இதில் நாங்கள் நன்றாக செயல்பட்டோம். பவர்பிளேவுக்கு பிறகு அருமையாக பந்து வீசினோம். ஆனால் 'பவர்பிளே'யில் பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் சிறப்பாக செயல்பட வேண்டியது அவசியமானதாகும். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.